


APRIL 2023

# AGNL

**ST. ANNE'S GENERALATE**

Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

Volume : 02 Issue : 21

## INAUGURAL TALK BY REV.SR.CLARA VASANTHI SSAM, SUPERIOR GENERAL, DURING THE EXTENDED COUNCIL MEETINGS IN THE PROVINCES AND REGIONS OF THE CONGREGATION IN APRIL, 2023

Dear sisters, I invite you to enrich this Meeting through your active and responsible participation through honest conversations. We will take part in this event with a family spirit and respond bravely to the challenges of our time and enhance our ability to be more service oriented. I wish that you return to your communities after this Meeting with a fruitful experience as it happened in the life of the Disciples who were on the way to Emmaus. Dear sisters, let us open ourselves to the outpouring of the Spirit into our hearts. The rest is the surprises of the Spirit of the Risen Lord. The presence of the Triune God, the warmth of Mother Mary, the blessings of our Patroness St.Anne, our co-Patrons St.Joseph and St.Francis of Assisi and the intercession of our Foundress Servant of God Mother Thatipathri Gnanamma, may accompany us in these days. I declare this Extended Council Meeting of the Province/Region open.

Like the disciples walking to Emmaus with the Lord beside them (Lk 24:13-35), we have been journeying towards the 26$^{th}$ General Chapter since January 2021. The storm of the global pandemic took all of us by shock and surprise and there were times of darkness, anxiety and uncertainty which haunted many of us. From the perspective of faith, it is wonderful to walk forward even in darkness knowing that the hand of the Lord holds us like a loving father who holds his child closely while now crossing a dangerous path. We have embarked on a long continuous relay journey. It is better to rest for a while inorder to rejuvenate, reflect, renew and enhance our ability, quality and energy so that our journey continues with enthusiasm. The Extended Council Meeting of the Province/Region is a God given opportunity to do so individually and as a Province/Region and Congregation.

The Extended Council Meeting is

- an expansion of the Province/Regional Council;
- a manifestation of the democratic governance in our Province/Region and Congregation at large; and
- bringing us together as family for reviewing, reflecting, reconstructing and rejuvenating our life and mission in the Province/Region.

Email : stanneschennai@yahoo.co.in (off), claravasanthissa@gmail.com (per), Web : www.stanneschennai.in

We are a religious family dedicated to community living and doing, and we are gathered here to discern together the future of our mission in the Church and in the world. During these two days, we will work together to fulfill the purpose of this honorable Meeting. The primary functions of the Extended Council Meeting are as follows (ref: 25th General Chapter Policy Book, page no.189):

- To reflect on the contextualization of our Charism in today's world.
- To examine and critically evaluate the reports sent from the communities about their prayer life, consecrated life, fraternal life and apostolic life.
- To consider how far the decisions taken at the 25th General Chapter are being implemented.
- To offer suggestions for the forthcoming Province Chapters/Regional Assemblies in 2024 and the 26th General Chapter in 2027.
- To discuss the financial position of the Province/Region.

During the 25th General Chapter in 2021, the Lord asked us to embark upon a journey of transformation to be able to be relevant in our times. We have traveled 27 months from the event of the 25th General Chapter. We certainly need to make a review, have clarity, understand the context and plan for the forthcoming days. In the past 27 months from January 2021 - April 2023, we have had many blessings along with several challenges. We are so proud of all the achievements born out of our hard work and commitment to excellence. We can go on talking about the areas where we have achieved, made changes in the Congregation, society, in the lives of the target people, and in the Church.

## We are in an era of changes, challenges and conflicts

We are said to be at another great turning point in history marked by epochal changes. Ecclesial life and particularly consecrated life is experiencing the heat of this change in many ways. Our Congregation is a gift of the Spirit to the Church to share her mission through the charism of our Foundress. Our reason to exist as Annites can be found only in our fidelity to the Charism and its ongoing updating and renewal in different epochs. Let us situate ourselves in the present moment of our history to assume responsibility for living our Charism today knowing that the past generations ran a good race and bequeathed a great charismatic heritage to us. Now, it is our turn to live up to what we are called to be at a time of epochal changes and pass on the light of our Charism to the coming generations.

### (i). Global situation

- Disasters, diseases, natural calamities, and accidents are taking place on a regular basis. It poses a serious threat to our normal life pattern.
- The cry of the earth and of the poor, wars and conflicts that shed blood on human history, the distressing situation of millions of migrants and refugees, an economy that makes the rich ever richer and the poor ever poorer, are some aspects of a scenario where only the Gospel can keep the light of hope burning.
- Many religious Congregations are rapidly moving towards an environment where they are economically weakened, numerically reduced, spiritually poor, and ministry-wise irrelevant.

### (ii). In our Congregation

- Once upon a time, our hard work yielded good result and now is a time whatever we do, however efficient and diligent is our work, we end up in failure and frustration.
- Our Lord Jesus Christ´s concern about abundance of harvest and the lack of workers is gripping us more than ever (Mt 9 : 37). Number of candidates who are joining our Congregation are less. The genuineness of vocation of the candidates is reduced to minimum. Therefore, there is a need for updatedness and innovation in formation training programme.
- Many of our elderly sisters are disappearing from us frequently.
- Many of our Regional language schools are moving towards closure due to low admission.
- Our English Medium Schools are losing its popularity and quality. We are not able to compete with the nearby private and corporate schools.
- We are unable to prepare teaching sisters to work in our aided schools. Very few sisters are involved in health ministry. Too many restrictions posted by the State Government paralyze us to take up this ministry forward.
- We find very difficult to thrive in social work ministry.
- Regarding Evangelization Ministry- only very few sisters show genuine interest for it. Also, we experience no welcome from the parishioners and non-cooperation from the part of Parish Priest in several places.
- ‘Financial insufficiency’ is a common term today, often used in the Congregation and in our institutions. On one hand we say fiscal deficit and on the other we need reformation in fiscal governance.

### (iii). In our communities

- There are ups and downs in the lives of our sisters. We work hard, we make great efforts to move the Congregation forward in the face of challenges. On the other hand, problems in community living, distractions, stress, sickness, over use of cell phones, disinterested in personal and common spiritual activities, excessive independency - all these pull us apart.
- How proud we are, of our sisters, when people speak of how grateful they are for our ministry! Each of us lives our call, fraternal life, and ministry at different levels of maturity and integrity. Our sisters who endure hard realities to be true to their vocation are treasures of our Congregation. On the contrary, it is heart-rending to know of situations when the limitations of our sisters hurt people or cause suffering and division in community.

In this above said context of changes, challenges and conflicts, there is a Call inviting us to think deeply, decide firmly, act efficiently, engage ourselves in a spiritual journey, express our missionary vocation through radical ministries, re-establish the identity of the Congregation visibly and translate our commitment meaningfully.

Our Congregation has a deep spiritual and missionary tradition. It is known for its´ many pioneering actions, initiatives, and progressive thoughts. We, individually and as Congregation,

- deeply respect our Congregation´s unique identity;
- fix our eyes on the target people, and march on the path of holiness;
- imbibe the wonderful qualities of sharing the same vision and family spirit; and

❖ face all the challenges that come on our way.

With this spirit of one mind and body, our Congregation will live for a thousand years, a thousand, and a thousand years. When God is on our side, there is no fear. When we experience and exercise genuine fraternity, manifest our religious identity, and express our love in action for the poor and marginalized, then there is a bright future awaiting for us.

Beloved sisters, we thank God for the good things that have happened so far. May our Foundress, the Charism she transmitted to us, and her missionary vision be and remain points of reference for our life and work; to stay rooted in our missionary vocation, above all by living the testament of our Foundress, in mutual love among ourselves and in zeal for the poorest of the poor in the world. In the immense field of the mission and life, may Jesus always be our model, as He was for our Foundress. In our journey towards holiness, with the grace of God, we hold hands together and walk the path shown by our Lord Jesus Christ. Yes, we are the true Disciples of Jesus, walking in the path of holiness. Thank you.

Yours lovingly

Sr. Clara Vasanthi SSAM.

**Sr. Clara Vasanthi SSAM**

## சபைத்தலைவியின் தொடக்க உரை
## விரிவான ஆலோசனைக்குழு கூட்டம், ஏப்ரல் 2023

நீண்ட தொடர் பயணத்தில் நின்று, இளைப்பாறி, சிந்தித்து, சக்தியை அதிகப்படுத்திக் கொண்டு மீண்டும் உற்சாகத்தோடு பயணத்தைத் தொடர்வது நல்லது. அதற்கான ஒரு வாய்ப்பு தான் நம் சபைக்கும், மாநிலத்திற்கும்/வட்டாரத்திற்கும் கிடைத்திருக்கும் வாய்ப்பு இந்த விரிவான ஆலோசனைக்குழு கூட்டம். சபையின், மாநிலத்தின்/வட்டாரத்தின் ஆலோசனைக்குழுவின் விரிவின் அடையாளம் இது. ஜனநாயக நிர்வாக அமைப்பின் வெளிப்பாடு இது. தேடல் மற்றும் திறனாய்விற்கான தருணம் இது.

இந்த கூட்டத்திற்கு வந்திருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடன் வரவேற்கிறேன். குழும உணர்வோடு, பணித்துவ சிந்தனையோடு, காலத்தின் அறிகுறிகளுக்கு பதிலளிக்கும் வீரத்தோடு, மனச்சான்றுடன் நம்மையே நாம் உற்று நோக்கி, தவறுகளைத் திருத்தி, நன்மைகளை பெருக்கிக் கொள்ளும் தகைமைப்பண்போடு இந்த இருநாள் நிகழ்வில் நாம் அனைவரும் பங்கு கொள்வோம். மூவொரு இறைவனின் பிரசன்னமும், அன்னை மரியின் அரவணைப்பும், நம் சபை பாதுகாவலி புனித அன்னாள், துணை பாதுகாவலர்களான புனித சூசையப்பர் மற்றும் புனித பிரான்சிஸ் அசீசியாரின் ஆசீரும், நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிப்பத்திரி ஞானம்மா அவர்களின் பரிந்து பேசுதலும் இந்நாட்களில் நம்மோடு நிச்சயமாக இருக்கும்.

இந்த விரிவான ஆலோசனைக்குழு கூட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு (25வது பொதுப்பேரவை தீர்மானங்கள், முடிவுகள், பக்கம் 189):

- திருச்சபையின் வளர்ச்சிக்கு நாம் ஆற்ற வேண்டிய பணியை ஆராய்ந்து பார்த்தல் மாநிலத்தின்/வட்டாரத்தின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்பத் திட்டமிடுதல்.
- இல்லங்களின் நிலைமை அதாவது செபவாழ்வு, அர்ப்பண வாழ்வு, சகோதாரத்துவ வாழ்வு, பணி வாழ்வு இவைகளைப் பற்றி அனுப்பப்படும் அறிக்கைகளை ஆராய்தல்.
- பொதுப்பேரவை முடிவுகள் எந்த அளவுக்கு நடைமுறையில் உள்ளன என்பதை பரிசீலித்தல்.
- அடுத்த பொதுப்பேரவை, மாநிலப்பேரவைக்கு தயாரித்தல்.
- மாநிலம்/வட்டாரத்தின் நிதி நிலைமையைப் பற்றி ஆராய்தல்.

இந்த இரண்டு நாட்களும் விரிவான ஆலோசனைக்குழுவின் நோக்கம் நிறைவேற நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்.

ஜனவரி 2021, சபையின் 25வது பொதுப்பேரவை நிறைவுபெற்றது. இன்றுடன் 27 மாதங்கள் நாம் 25வது பொதுப் பேரவைக்குப் பின்னால் பயணித்திருக்கிறோம். கடந்து சென்ற 27 மாதங்கள், 26வது பொதுப்பேரவை வரை கடக்க வேண்டிய ஏனைய வருடங்கள் இரண்டையும் பற்றிய தெளிவும், திறனாய்வும், திட்டமிடலும் நமக்கு நிச்சயமாக தேவையாக உள்ளது. 2021 - 2023 இடையிலான 27 மாதத்திற்குள் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. சபையளவில், சமுதாயத்தில், பொருளாதாரத்தில், இலக்கு மக்களின் வாழ்வில், திருஅவையில், இயற்கைச்சூழலில் என்று.... நாம் மாற்றங்கள் அடைந்துள்ள பகுதிகளைப்பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

### *மாற்றங்கள், சவால்கள், பிரச்சனைகளின் சூழலில் நாம்*

### *அ. உலக அளவில்*

- ❖ தினம் தினம் மாறிக் கொண்டிருக்கின்றதோ என்று நினைக்கும் விதத்தில் நிகழ்வுகள் உலகில் நடந்தேறி வருகின்றன.
- ❖ நம்பிக்கைத்தளர்விற்கு வழிகோலும் வண்ணம் பேரிடர்களும், நோய்களும், இயற்கைச் சீற்றங்களும், விபத்துக்களும் அடிக்கடி அரங்கேறி வருகின்றன.
- ❖ பல நாடுகளில் பொருளாதாரம் வலுவிழந்து, பலமிழந்து, திவாலாகி ஒட்டு மொத்த மக்களின் வாழ்வே கேள்விக்குறியாக உள்ளது.
- ❖ உக்ரேன் - ரஷ்யா போர் உலக போராக மாறுமோ என்ற போர் மேகம் சூழ்ந்துள்ளது.
- ❖ துறவறச்சபைகளும் பொருளாதார பலமிழந்து, தேவஅழைத்தல் குறைந்து, ஆன்மீக சாரம் குன்றி, பணிகளின் பொருத்தம் இழந்து, நலிவடையும் சூழலை நோக்கி வேகமாக நகர்ந்து வருகின்றன.

### *ஆ. சபையளவில்*

- ❖ நாம் ஆழமாக சிந்தித்து, ஆன்மீகப் பயணத்தில் ஈடுபட்டு, வேரோட்டமான செயல்பாடுகளை வெளிப்படுத்தி, சபையின் தான்மையையும், நமது அர்ப்பணத்தின் அர்த்தத்தையும் வெளிப்படுத்த வேண்டிய மிகப்பெரும் அழைப்பு நம்முன் நிற்கின்றது.
- ❖ 'அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு' என்ற நமது ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் கவலை நம்மையும் பற்றியுள்ளது (மத்தேயு 9 : 37).
- ❖ தொடர்ந்து நம்மை விட்டு மறைந்து வரும் மூத்த சகோதரிகளின் எண்ணிக்கை நமக்கு பெரும் துயரத்தை தருகிறது.
- ❖ வட்டாரமொழி கல்வி பயில்வோரின் எண்ணிக்கை குறைவதால் நமது பல பள்ளிகள் மூடுவிழாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.
- ❖ அருகாமையில் உள்ள போட்டி பள்ளிகளின் தரத்திற்கும், உள்கட்டமைப்பிற்கும் ஈடுகொடுக்க முடியாமல் நமது ஆங்கிலப்பள்ளிகள் நலிந்து வருகின்றன.

- நமது பள்ளிகளில் பணியாற்ற ஆசிரிய (தகுதித் தேர்வு) சகோதரிகளை உருவாக்க முடியவில்லை.
- நலவாழ்வுப் பணியிலும் ஆட்கள் குறைவு, வசதிகள் குறைவு, அரசாங்கத்தின் கெடுபிடி அதிகம் என்பதால் இப்பணியையும் வெற்றிகரமாக நம்மால் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.
- சமூகப்பணியில் சிறுவர் இல்லப்பணியோ, முதியோர் இல்லப்பணியோ, மறுவாழ்வுப் பணியோ, எந்த பணியாக இருந்தாலும் எல்லா பணிகளும் அரசின் கெடுபிடிகளுக்கும், நிர்பந்தத்திற்கும் உட்பட்டு பெருமளவில் வளர முடியாமல் போகின்றது.
- நற்செய்திப் பணியையும் ஆற்றுவதற்கு ஆட்கள் இல்லை, ஆர்வமில்லை, வரவேற்பு இல்லை, பங்குப் பணிகளில் ஒத்துழைப்பு இல்லை என்ற சூழலை நாம் சந்திக்கிறோம்.
- உருவாக்க இல்லங்களில் இணைவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அவ்வாறு இணைவோரின் தேவஅழைத்தலின் உண்மைத்தன்மையும் குறைவாக உள்ளது. எனவே பயிற்சிகளில் மாற்றமும், வேரோட்டமும் தேவைப்படுகிறது.
- ‘நிதிப்பற்றாக்குறை’ என்பது இன்றைக்கு பொதுச்சொல்லாக மாறி விட்டது. நிர்வாகத்தில், இல்லத்தில், நிறுவனத்தில் இவ்வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. ஒரு புறம் நிதிபற்றாக்குறை என்கிறோம், மறுபுறம் நிதி ஆளுகையை சீர்மை செய்தல் அவசியம் என்பதை உணர்கிறோம்.

### *இ. குழுமங்களில்*

- குழுமங்களில் சகோதரிகளின் வாழ்வுமுறையிலும் ஏற்றங்களும் இருக்கின்றன, இறக்கங்களும் இருக்கின்றன. சகோதரிகள் கடுமையாக உழைக்கின்றார்கள்; நிறுவனங்களை சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்துச் செல்ல பெரும் முயற்சி செய்கின்றார்கள். மறுபுறமோ குழும வாழ்வில் சிக்கல், சிதறல், மன உளச்சல், கைபேசிக்கு முக்கியத்துவம், குழுமங்களில் ஆன்மீக வாழ்வில் சரிவு, அதீத சுதந்திர போக்கு...இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட நிலைகளையும் பார்த்து வருகின்றோம். அடர்த்தியான நல்லவைகளுக்கு மத்தியில் இப்படிப்பட்ட பல தளர்ச்சிகளும் நம் மத்தியில் இருக்கின்றன.

### *முடிவுரை*

ஆழ்ந்த ஆன்மீகம் மற்றும் பணித்துவ பாரம்பரியம் கொண்ட சபை நம் சபை. பல முன்னோடி செயல்களுக்கும், முன்னெடுப்பு முயற்சிகளுக்கும், முற்போக்குச்சிந்தனைகளுக்கும் வித்திட்ட சபை நம் சபை. எத்தனை சவால்கள் வந்தாலும் அத்தனையையும் தாண்டி அசையா விருட்சமாய் வளர்ந்த சபை நம் சபை. எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் அனைத்தையும் ஒற்றுமையாக எதிர்கொண்டு உயர்ந்த சபை நம் சபை. துறவறத்தான்மையை மதித்து, திருஅவையை அன்பு செய்து, இலக்கு மக்களை நோக்கி பார்வையைத் திருப்பி பயணம் செய்யும் சபை நம் சபை. ஒரே சிந்தனை, ஒரே இலக்கு, உன்னதமான குடும்ப உணர்வு என்ற அற்புதமானத்தன்மைகளை உள்வாங்கி வாழும் சகோதரிகளைக் கொண்ட சபை நம் சபை. ஆயிரம் ஆண்டுகள், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழும் சிரஞ்சீவி தன்மைகொண்ட சபை நம் சபை.

கடவுள் நம் பக்கம் இருக்க நமக்கென்ன பயம்? நல்ல மனச்சான்று நம்மிடையே இருக்க நமது குறைகளை, தடைகளைக் கடப்பது கடினமா என்ன? ஒற்றுமையும், துறவறத்தான்மையும், ஏழைகள் மீது பாசமும், நமது மறையாத பண்பாக இருக்கின்ற போது எதிர் வரும் காலம் நம் சபைக்கு நல்ல காலமாகத்தானே இருக்க முடியும்?

அன்பு சகோதரிகளே! விரிவான ஆலோசனைக்குழு கூட்டத்தில் நாம் நுழைவோம். பரந்து பட்ட சிந்தனைகளையும், கூர்மையான மனச்சான்றையும் இங்கு நாம் கொண்டிருப்போம். இது வரை நிகழ்ந்த நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். செய்த தவறுகள், செய்யத் தவறியவைகள் இவற்றிற்காக மனம் வருந்துவோம். இலக்கு நோக்கியப்பயணத்தில் இறைவனின் அருளோடு நம் சபை கொண்டிருக்கும் இலக்கை நோக்கி நமதாண்டவர் இயேசு கிறிஸ்து காட்டிய வழியில் நடப்போம். கிறிஸ்துவின் உண்மைச்சீடர்களாய் புனிதத்தின் பாதையில் பயணிப்போம். நன்றி.

என்றும் அன்புடன்

Mr. Clara Vasanthi SSAM.

சபைத்தலைமையன்னை













*Prayerful wishes to all the sisters*

*in the Provinces & Regions.*